திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ நாகநாத சுவாமி

கோயில் வரலாறு



உ

திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில் வரலாறு

★

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
'அற்புதக்கனி, திருமுருகாற்றுப்படை விளக்கம்' ஆசிரியரும்,
அறநிலையப் பாதுகாப்பு இலாகா H. R. & C. E. ஆதரவில்
பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய
திரு. **R. *பஞ்சநதம் பிள்ளை*** *அவர்களால்*

எழுதப்பெற்று,

★

மேற்படி கோயில் நிர்வாக அதிகாரி
திரு. **G. *சோமசுந்தரம்*** B. Sc. *அவர்கள்*

டிரஸ்டி
திரு. **T. S. *நடேசம் பிள்ளை*** *அவர்கள்*
ஆகியோரால் வெளியிடப்பெற்றது.

★

தேவஸ்தான வெளியீடு.

1955

உரிமை செய்யப்பெற்றது.] [விலை 4 அணா.

நன்றி உரை

ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில் வரலாறு பல விளக்கங்களுடன் வெளியிடப்படுகின்றது. கோயிலுக்கு வருவோரும், பிறரும் கோயிலின் பெருமைகளைத் தெரிந்து கொள்வதற்கு வரலாறு ,இன்றியமையாததாகின்றது. இதன் முகப்பிலுள்ள அழகிய மூவர்ணப்படத்தை **திரு. K. பார்வதியம்மாள்,** லால்குடி **ஜானகியம்மாள்** ஆகிய இருவரும் அன்புடன் உதவினார்கள். ஒய்வுபெற்ற தமிழாசிரியர் திரு. R. **புஞ்சநதம் பிள்ளை** அவர்கள் இவ் வரலாற்றை எளியமுறையில் எழுதிக் கொடுத்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

G. சோமசுந்தரம், B. Sc.,
நிர்வாக அதிகாரி.

உள்ளடக்கம்

		பக்கம்
1.	கோயிலும் இருப்பிடமும்	1
2.	கோயிலின் அமைப்பு	3
3.	கோயிலின் படம்	4
4.	தலப்பெருமைகள்	5
5.	திருப்பணிகள்	5
6.	பூஜையும், திருவிழாக்களும்	6
7.	வருமானமும், சொத்துக்களும்	7
8.	நிர்வாகம்	7
9.	புராண வரலாறுகள்	7
10.	துதிப்பாடல்கள்	13

கோயில் விளக்கம்

கோயில்	....	ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில்
மூலவர்	....	ஸ்ரீ நாகநாதர்
அம்மன்	....	ஆனந்தவல்லி
தீர்த்தம்	....	சிவகங்கை
மரம்	....	வில்வமரம்

இந்நகரில் உள்ள ஐந்து நாதர் கோயில்களுள் ஒன்று நாக கன்னியர் எழுவரும், சாரமாமுனிவரும் வழிபட்டது.

அட்டைப்படம்—சாரமாமுனிவர் ஸ்ரீ நாகநாதரை வழிபடுதல்.



நடராஜர்

திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில் வரலாறு

1. கோயிலும் இருப்பிடமும்

யாவற்றையும் கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உரு வத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகின்றான். அத்தகைய சிறப் பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் பரவியிருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், பூமிக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில் தானே நீர் வெளிப்படுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர் களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக் காண ஒண்ணுதபால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப் பட்டருள்வன் அன்பர்க்கே"—(சிவஞானசித்தியார்)

"எங்கும் சிவனிருப்ப னுனலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாம் ஆவரித்து நிற்கினும்பால்
பாவுமுலைக் கண்மிகுதி ப்பார்."

(சிவஞானப்பிரகாச வெண்பா)

மேலும் மின்சார அணுக்கள் நிறைந்த தனி இடம்போல (Power House) திருவருள் அணுக்கள் நிறைந்த இடங்களாகும் திருக்கோயில்கள். ஆதலின் பெருதற்கருமையான மனிதப் பிறப்பைப் பெற்றவர் அனைவரும் பசுபதியாகிய பரமனை அன்பினுல் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப்பெற முயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்துமாடும் அரன் பணிக்காக அன்றே" என்று ஆன்றோரும் கூறியுள்ளார். "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையாரும் கூறியுள்ளார்.

தென்னுடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவற்றுள் என்றும் வற்ருத புனலுடைய—கங்கையிற் புனிதமாகிய காவிரி பாயும் சோழநாட்டில், காவிரிக்குத் தென்கரையில் தென் கைலாயம் என்னும் திருச்சிராப்பள்ளி நகரத்தில், மலைக்கோயிலுக்கு வடமேற்கில் ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில் உள்ளது. திருச்சிராப்பள்ளியில் உள்ள ஐந்து நாதர் கோயில்களுள் இது ஒன்று. மற்றவை பெரிய கடைவீதியில் உள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோயில், கீழபொலிவார்டு ரோட்டில் உள்ள ஸ்ரீ பூலோகநாதர் கோயில், மேலபொலிவார்டு ரோட்டில் உள்ள ஸ்ரீ விஸ்வநாதர் கோயில், பாலக்கரை ஆற்றிற்கு வடகரையிலுள்ள ஸ்ரீ வெளிகண்டநாதர் கோயில் என்பன. மூலமூர்த்தியின் பெயர் **ஸ்ரீ நாகநாதர்**. சுயம்புவாய்த் தோன்றியவர். நாகலோகத்து நாககன்னியர் எழுவரால் பூசிக்கப்பெற்றதாலும், நாகரெத்தினங்களையும், நாகப்பாம்பையும் ஆபரணமாகப் பூண்டதாலும் நாகநாதர் எனப்பெயர் பெற்ருர் மூலமூர்த்திக்குத் தற்போதும் நாககவசம் அணியப்படுகிறது. அம்பிகையின் பெயர் **ஆனந்தவல்லி** ஆகும். பரனுரிடத்தில் படரும் இன்பக் கொடிபோல் விளங்குவதால் ஆனந்தவல்லி என்றும் பெயர் அமைந்தது. அம்பிகை அழகிய வடிவத்தில் காட்சி தருகின்ருள். தல அடியார்களாகிய சாரமாமுனிவர், நாககன்னியர் முதலான

வர்களுடைய வடிவங்களும், புதிதாக அமைக்கப்பெற்ற நால்வர், அறுபத்துமூவர் ஆகியோருடைய சிலைகளும் உள்ளன. மலைக் கோயிலை வெளிவீதி வழியாய்ச் சுற்றிவரும் போது இக்கோயிலை அடையலாம். திருச்சி கோட்டை ரயில்வே நிலையத்துக்குக் கிழக்கிலும், திருச்சி டவுன் ரயில்வே நிலையத்துக்கு மேற்கிலும், வெளியூர்க்குச் செல்லும் மோட்டார் (Bus) நிலையத்துக்குப் பக்கத்தில் தெற்கிலும் இக்கோயில் அமைந்துள்ளது.

2. கோயிலின் அமைப்பு

கோயில் அழகானது. வீதியின் தரைமட்டத்திற்குத் தாழ்வாய் உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்கள் உள்ளன. கோபுரங்கள் 3 கண்களை உடையன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் பக்கத்திலேயே அமைந்துள்ளன. கோயிலுக்குள் ஓர் பிராகாரம் உண்டு. வெளிப் பிராகாரம் மலைக்கோயிலின் வெளி வீதியேயாகும். உட்பிராகாரத்தில் மேற்கில் விநாயகர், முருகர், தண்டாயுதபாணி முதலிய மூர்த்திகளும், கல்யாண மண்டபமும், வடக்கில் வாகன அறைகளும், வடகிழக்கில் உள்ள மண்டபத்தில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிக்ஷாடனர் முதலிய உற்சவ விக்கிரகங்களும் உள்ளன. அம்மன் சந்நிதிக்கு நேராகச் சிவகங்கைத் தீர்த்தம் உள்ளது. இதன் பக்கத்தில் நந்தவனம் இருக்கிறது. இதன் வரலாறு பின்னே கூறப்பட்டுள்ளது. உள்வாயிலுக்கு வெளியே நடராஜர் மண்டபமும், ஓர் கிணறும் உள்ளன. தென்கிழக்கில் மடைப்பள்ளியும், தெற்கில் புதிதாய் அமைக்கப்பெற்ற நால்வர் வடிவங்களும், அறுபத்துமூவர் சிலைகளும் உள்ளன. கோயிலுக்கு வெளியில், மேல் கோபுரத்துக்குப் பக்கத்தில் தேவஸ்தான அலுவலகம் உள்ளது. தலவிருட்சம், வில்வம். கோயிலுக்கு நான்கு பக்கங்களிலும் கோயிலைச் சேர்ந்த வீடுகள் இருக்கின்றன. கோயிலின் சுற்றளவு கிழமேலடி 200. தென்வடலடி 130. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

3. கோயிலின் படம்



எண்கள் விளக்கம்

1. மேல கோபுரவாயில்
2. விநாயகர், முருகர் முதலியோர்
3. வாகன அறைகள்
4. நவக்கிரகங்கள்
5. உள்வாயில்
6. மூலவர் (நாகநாதர்)
7. அம்மன் சந்நிதி
8. கிணறு
9. நால்வர் - அறுபத்துமூவர்
10. உற்சவமூர்த்திகள் மண்டபம்
11. கிழ் கோபுரவாயில்
12. மடைப்பள்ளி
13. நந்தவனம்
14. நடராஜர் மண்டபம்
15. சிவகங்கைக் குளம்
16. கல்யாண மண்டபம்

4. தலப்பெருமைகள்

திருச்சிராப்பள்ளியில் உள்ள ஐந்து நாதர்களில் இக்கோயில் ஒன்று. மலைக்கோயிலை அடுத்துள்ளது. தேவி தவம்செய்து பெருமானை மணம் செய்துகொண்டார். மூலவர் சுயம்பு வடிவம். நாககன்னியர்களால் செவ்வந்தி மலர்கொண்டு பூசிக்கப்பெற்றது. சாரமாமுனிவர் செவ்வந்திப் பயிர்வைத்து நந்தவனம் அமைத்து வழிபட்டது. சப்தரிஷிகள், சடாயு முதலியோர் வழிபட்டது. சிவகங்கைத் தீர்த்தத்தைத் தன்னகத்தே உடையது. சக்தியும். சிவமும் சேர்ந்திருப்பதுபோலத் தேவி சந்நிதியும், மூலவர் சந்நிதியும் பக்கத்திலிருந்து காட்சியளிக்கின்றன தரிசிப்பவர்களும் ஒரே இடத்திலிருந்து தரிசிக்கிறார்கள். நவக்கிரகங்களுக்கு விசேட பூஜைகள் உண்டு. திருமணங்கள் அவ்வப்போது நடைபெறுவதுண்டு. நகரமக்கள் எளிதில் வந்து தரிசிக்கும்படியாய் அமைந்துள்ளது.

5. திருப்பணிகள்

புதிய கோயிலை அமைப்பதைப் பார்க்கினும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியம் உண்டு. "புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழயதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்பது ஆன்றோர் வாக்கு. அதன்படி இக்கோயிலில் அன்பர் திரு. **நாகலிங்கம் செட்டியார்** அவர்களின் முயற்சியால் பல திருப்பணிகள் நிறைவேறியிருக்கின்றன. உற்சவ விக்கிரகங்கள் பல புதிதாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. 20—12—52-ல் கூடப்பள்ளி மிராஸ்தார் திரு. **சிவகுருநாத பிள்ளை** அவர்களால் சனி உற்சவமூர்த்தியும் காகவாகனமும் செய்யப்பெற்றன. பிறகு 1935-ம் ஆண்டில் மின்சார விளக்குகள் ஸ்ரீமதி **ராதையம்மாள்** அவர்களால் பொருத்தப்பெற்றன. 1954-ல் சமயாச்சாரியார் நால்வர் சிலைகளும், அறுபத்துமூவர் சிலைகளும் புதிதாய்ச்செய்து பிரதிட்டை செய்யப்பெற்றன.

மேலும் பல திருப்பணிகள் நடைபெறவேண்டி யிருப்பதால் சிவநேசச் செல்வர்கள் வேண்டுவன செய்து உதவுவார்களாக.

6. பூஜையும் திருவிழாக்களும்

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடை பெறுகின்றன. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும்.

"காலை தொழ அற்றை வினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்."

(சிவதரிசன மகத்துவம்)

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் பெருவிழாவாகிய தேர்த் திருவிழா நடைபெறும். பத்து நாட்கள் வரையில் சுவாமியும் அம்மனும் பல வாகனங்களில் புறப்பட்டு வெளிவீதியில் காட்சி கொடுக்கும். மாதந்தோறும் வெள்ளிக்கிழமையிலும், பிரதோஷ காலங்களிலும் அம்பாள் புறப்பட்டுக் கோயிலுக்குள் உலா வரும். வைகாசி மாதத்தில் 10 நாட்கள் வசந்தவிழா நடைபெறும். ஆனியிலும், மார்கழித் திருவாதிரை நாளிலும் நடராஜா புறப் படும். ஆடிப்பூரத்தில் அம்பாள் புறப்படும். புரட்டாசியில் நவ ராத்திரி விழாவும், ஐப்பசியில் கந்தர் சஷ்டிவிழாவும், திருக்கல்யாண மும் நிகழும். கார்த்திகையில் தீபக்காட்சி நடைபெறும். மார்கழியில் திருப்பள்ளியெழுச்சிப் பூஜையும், திருவெம்பாவைப் பாராயண மும் நிகழும். தைப்பூச நாளில் பஞ்சமூர்த்திகள் காலையில் காவிரி நதிக்குப் புறப்பட்டுச்சென்று இரவில் வலமாகச் சுற்றி வரும். சனிப்பெயர்ச்சியின்போது சனிபகவான் காக வாகனத் தில் புறப்பட்டு வீதியுலாவரும். (நவராத்திரி விழாவில் விஜயதசமி நாளில் மலைக்கோயில் சுவாமி இக்கோயிலில் வந்து தங்கி இரவில் குதிரை வாகனத்தில் புறப்பட்டு அம்புபோட்டுச் செல்லும்.)



சோமாஸ்கந்தர்

7. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்குச் சுமார் 7 ஏகர் நன்செய் நிலங்கள் உள்ளன. வீடு, கடை வாடகைமூலம் சுமார் ரூ 12000 ஆண்டு தோறும் வருமானம் கிடைக்கும். சுமார் 10000 ரூபாய் மதிப்புள்ள நகைகள் இருக்கின்றன.

8. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஜில்லா தேவஸ்தான கமிட்டியின் மேற்பார்வையில் இருந்துவந்தது. பிறகு (Scheme) திட்டம் ஏற்பட்டு 1946-ம் ஆண்டிலிருந்து அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious & Charitable Endowments) நிர்வாகத்திற்குட்பட்டு நிர்வாக அதிகாரி ஒருவர் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற தர்ம கர்த்தாக்கள் உடனிருந்து பார்த்து வருகிறார்கள்.

9. புராண வரலாறுகள்

இத்தலத்தின் பெருமைகளைத் தெரிவிக்கும் வரலாறுகள், மலைக்கோயில் செவ்வந்திப் புராணத்தில் சேர்ந்திருக்கின்றன. நைமிசாரண்ய முனிவர்களுக்குக் கௌதம முனிவர் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் சுருக்கமாய்க் கூறப்படும்.

1. சிவகங்கை வரலாறு

ஒரு காலத்தில் உமாதேவி சிவபெருமானை நோக்கித் தாம் பூலோகத்திற்குச் சென்று ஓர் தீர்த்தத்தில் படிந்து வழிபடவேண்டுமென்று வேண்டினார். பெருமான் தேவியாரைத் தென்கைலாயமாகிய திரிசிராமலைக்குச் செல்லும்படி அருளினார். பெருமான் தமது சடையில் உள்ள கங்கையில் சிறிது எடுத்து விடுத்தருள அது பிரளயம் போலப் பெருகியது. அப்போது சந்திரன் சங்கு

போலவும், சூரியன் செந்தாமரை மலர் போலவும், மலைகள் யாவும் ஆமைகளைப் போலவும், மேகங்கள் கொடிப்பாசிகளைப் போலவும் பிரளய வெள்ளத்தில் மிதந்து காணப்பட்டன. (இவைகள் உயர்வு நவிற்சியாகக் கூறப்பெற்றன. இறைவனுடைய பேராற்றலால் அணுவும் மலையாகும் என்பதும், மலையும் அணுவாகும் என்பதும் குறிப்பு). பெருமான் கோபக்குறியுடன் பார்க்கவே கங்கைப் பிரளயம் ஒடுங்கித் திரிசிராமலைக்கு வடமேற்கில் சிவகங்கை என்னும் தீர்த்தமாக மாறியது. அதன் பக்கத்தில் பெருமான் (நாகநாதர்) சுயம்புவாகத் தோன்றினர்.

காத்தியாய முனிவர் செய்த தவத்தால் உமாதேவியார் ஓர் தாமரை மலரில் 3 வயதுப் புதல்வியாய்த் தோன்றி அம்முனிவரால் போற்றி வளர்க்கப் பெற்ருர். தேவியாருடைய கூந்தலில் இயல் பாகவே மணம் வீசியது. தேவியார் சிவபிரானை மணந்துகொள்ளச் சிவகங்கைத் தீர்த்தத்தில் படிந்து பக்கத்தில் சுயம்பு வடிவான நாகநாத மூர்த்தியை வழிபட்டுத் தவஞ்செய்து வந்தார். தேவியின் தவத்திற்கு இரங்கிப் பெருமான் காட்சி கொடுத்துத் திருமணம் செய்து கொண்டார்

இந்தச் சிவகங்கைத் தீர்த்தத்தில் சித்திரை மாதப்பிறப்பிலும், கடைசியிலும், பூரம் நவமி திதியிலும் படிந்து வழிபடுவோர்க்கு அருள் புரியும்படியும் வேண்டினர். இதில் படிந்தவர் பிசாசு, பேய், தீவினை முதலியவைகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கப் பெறுவர். புத்திரப்பேறு, வீரம், கீர்த்தி, சித்தி, முத்தி முதலிய நன்மைகளை அடைவர். இதில் சப்த மாதர்கள், சப்தரிஷிகள், ஜடாயு முதலியோர் படிந்து பேறு பெற்றுள்ளார்கள். இதற்கு சிவநதி, சிவதீர்த்தம், சிவதடம், நாகதீர்த்தம் முதலிய பெயர்களும் வழங்கும். இத்தீர்த்தம் அம்மன் சந்நிதிக்கு நேராக உள்ளது. தீர்த்தக்கரை குளிர்ச்சியாய் விளங்குவதுபோலவே, ஆனந்தவல்லி அம்மையின் அருள் நோக்கும் தரிசிப்பவர்களுக்கு குளிர்ச்சியை

சாரமாமுனிவர்

—மகிழ்ச்சியை அளிக்கிறது. (மலைக்கோயிலில் சித்திரைவிழாவில் 6-ந் திருநாளில் தேவி இவ்விடத்துக்கு வந்து தவஞ்செய்து செல்லும் வழக்கம் தற்போது நின்றுவிட்டது). சிவத்தை விட்டகலாத சக்தியே இறைவனைக் குறித்து தவஞ்செய்து வழிபட்டதென்றால், பெண் அம்சமாயிருக்கின்ற உயிர்கள் எல்லாம் இறைவனை வழிபட வேண்டும் என்பது குறிப்பு.

2. சாரமாமுனிவர் வரலாறு.

இமயமலைப் பிரதேசத்தில் பிரமசன்ம முனிவர் என்பவர் சிவபிரானது அருளைப்பெற வேண்டித் தவம் செய்தனர். இவர் வேதம், உபாங்கம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய நூல்களை நன்கு பயின்றவர். ஒருநாள் பெருமான் ரிஷப வாகனத்தில் தோன்றி "முனிவனே நீ காசியில் உள்ள சோமசன்ம முனிவருக்கு மகனாகத் தோன்றித் துறவுபூண்டு திரிசிராமலையை அடைந்து அவ்விடம் உறையும் இறைவனைப் பாதலத்தில் உள்ள முள்செவ்வந்தி மலர்களால் அர்ச்சனைசெய்து வழிபட்டால் அருள் கிடைக்கும்" என்று அசரீரிமூலம் அருள்செய்து மறைந்தார். அவ்வாறே பிரமசன்ம முனிவர் யோக முறையால் உடலைவிட்டு நீங்கி, காசியில் சோமசன்ம முனிவருக்கும், அவர் மனைவிக்கும் புதல்வனாகப் பிறந்தார் புதல்வன் வேத ஆசாரனாய் விளங்கிய படியாலும், சகல நூல்களின் சாரங்களைக் கொண்டதாலும், முனிவர் சாரன் என்னும் பெயர் சூட்டினார். "வேத ஆசாரனுஞ் சாரன்" என்கிறார் ஆசிரியர். சாரமாமுனிவர் கல்வி கேள்விகளிற் சிறந்து வாசபேயம் முதலிய வேள்விகளைச்செய்து வந்தார். பிறகு பெற்றோரின் விருப்பப்படி மனையறத்தில் சிலகாலம் இருந்து பிறகு துறவுநிலையை மேற்கொண்டார். பூர்வத்தில் இறைவன் தமக்கு அறிவித்தபடி சாரமாமுனிவர் பல இடங்களுக்கும் சென்று, தென் கைலாயமாகிய திரிசிராமலையை அடைந்தார். கழுத்து மட்டில் விடம்பொருந்திய கடவுளையும், கமுக மரத்தைப்போன்ற

கழுத்தையும், கருமையான கூந்தலேயுமுடைய தேவியையும் தரிசித்த மாத்திரத்தில் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

"கண்டமட்டிலே உருகினுன் ஆலயங் கண்டு
கண்டமட்டிலே விடஞ்செறி கடவுளேக் கமுகார்
கண்டமட்டிலேய் கருங்குழல் இறைவியைக் கண்டான்
கண்டமட்டிலே அடங்கிடா மகிழ்ச்சியாற் களித்தான்."

முனிவர் இவ்விடத்தில் ஓர் பன்னகசாலே அமைத்து அதில் இருந்துகொண்டு தாமரை, குவளே, செங்கழுநீர், சண்பகம், குருந்து, மல்லிகை, முல்லே. இருவாட்சி முதலிய மலர்களால் பெருமானே அருச்சித்து வழிபட்டு வந்தார்.

3. சாரமாமுனிவர் நந்தவனம் அமைத்தது.

சாரமாமுனிவர் தம் ஆச்சிரமத்தில் இருந்துவரும் நாளில் ஒருநாள் தென்றற்காற்று மூலம் ஓர் பூவின் மணம் வீசியது. இது முட்செவ்வந்தி மலரின் மணமாய் இருக்கலாமோ என்று முனிவர் எண்ணினுர். பெருமான் அவருடைய கனவில் தோன்றி வழிபாட்டுக்கு வரும் நாககன்னியர்களேச் சந்தித்துத் தெரிந்து கொள்ளும்படி அருளினுர். அவ்வாறே முனிவர் பெருமானுடைய சந்நிதியில் தங்கியிருந்தார். அப்போது சிவகங்கைத் தீர்த்தத்தின் பக்கத்தில் உள்ள பிலத்துவாரத்தின் வழியாக நாகலோகத்து நாகராஜன் புதல்வியராகிய நாககன்னியர் எழுவர் வெளியே வந்து தீர்த்தத்தில் படிந்து புதுமையான செவ்வந்தி மலர்களால் இறைவனே அர்ச்சித்து வழிபட்டார்கள். சாரமாமுனிவர் அவர்களேச் சந்தித்து உரையாடிப் பூக்களால் அர்ச்சிப்பதால் ஏற்படும் புண்ணியத்தைக் கூறி மந்திரங்களேயும் உபதேசித்தார். பிறகு பெருமான் தமக்குக் கனவில் செவ்வந்தி மலரைப்பற்றி அருளியதைக் கன்னியர்களிடம் கூறி, அதைப் பெறுவதற்குத் தாமும் உடன் சென்ருர். முனிவர் நாககன்னியருடன் பிலத்துவாரத்தின் வழியே

நாகராஜனும், நாககன்னியரும்

நாகலோகஞ் சென்று நாகராஜனைக் கண்டார். நாகராஜன் வேண்டிய உபசாரங்களைச் செய்து முனிவருக்கு நாகரெத்தினங் களையும், முட்செவ்வந்திச் செடிகளையும் பரிசாகக் கொடுத்தான். முனிவர் அவைகளைப் பெற்றுக்கொண்டு பிலத்துவாரத்தின் வழியே வெளிவந்து நாகரெத்தினங்களைப் பெருமான் முடியிற் சூட்டினுர். முட்செவ்வந்திச் செடிகளை மேற்குத் திசையில் சிவ கங்கைக்குப் பக்கத்தில் வைத்துப் பயிர்செய்து பெருமானை வழி பட்டு வந்தார். அந்த நந்தவனம் இன்றும் உள்ளது. சாரமா முனிவரின் உருவச் சிலையும் கோயிலில் உள்ளது.

சாரமா முனிவரைப்பற்றிய வேறு கதைகளும் சொல்லப்படு கின்றன. திருவானைக்காவலில் சிலந்திக்கும் யானைக்கும் ஏற்பட்ட சண்டையில் சாரமா முனிவர் சமாதானம் செய்ததாகச் சொல்லப் பட்டுள்ளது. (The saint Saramamuni of the Trichinopoly rock came and reconciled the antagonists சிலந்தி-யானை)—gazetteer. இராஜ சூடாமணி என்னும் சூரவாதித்த சோழன் இறந்தபோது அவன் பிரிவால் வருந்திய புதல்வர் களுக்குச் சாரமா முனிவர் ஆறுதல் சொல்லியதாகக் கூறப்படு கிறது. இவைகளால் சாரமா முனிவர் என்பவர் பலகாலம் வாழ்ந்த ஒருவரோ அல்லது இப்பெயர் கொண்டவர் பலரோ என்று கருதவேண்டியிருக்கிறது.

4. பெருமான் நாகம்பூண்டது

தாருகாவனத்து (பராய்க்காடு) முனிவர்கள் சிவபக்தியில் லாதவர்களாய்க் கர்மத்தாலேயே எல்லாவற்றையும் அடையலாம் என்ற செருக்குடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாக்கப் பெருமான் அழகிய கோலத்தில் பிக்ஷாடன வடிவங் கொண்டு கையில் கபாலம் ஏந்திப் பலியேற்கச் சென்ருர். முனி வரின் பத்தினிகள் பெருமான் கோலத்தைக்கண்டு கற்புக்குலைந் தார்கள். அதைக்கண்டு முனிவர்கள் கோபங்கொண்டு பெரு

மானைக் கொல்வதற்கு அபிசாரம் என்ற ஓர் வேள்வி செய்தனர். அதிலிருந்து பல பொருள்கள் வந்தன அவைகளை ஏவிப் பெருமானைக் கொல்ல முயன்றனர் புலியை ஏவினர். பெருமான் அதைக்கொன்று தோலை உடுத்திக்கொண்டார். மான் வந்தது. அதனைக் கையில் ஏந்தினர். மழு வந்தது. ஆயுதமாகக் கொண்டார். முயலகன் என்னும் அசுரன் வந்தான் அவனைக் கீழே தள்ளி முதுகில் ஏறி நின்றார். மந்திரங்களை ஏவினர். அவைகள் உடுக்கை வடிவங்கொண்டுவர அதைக் கையில் தாங்கினார். பிறகு பாம்புகள் வந்தன. அவைகளை ஆபரணங்களாக அணிந்தார். பெருமான் தம்மை அழிக்கவந்த பொருள்களில் சிலவற்றை அழித்தார். சிலவற்றைக் கொல்லாமல் ஆபரணங்களாகக் கொண்டார். இவ்வாறு எல்லாவற்றையும் அடக்கித் தாம் அழியாத பரம்பொருளாகக் காட்டினார். முனிவர்களும் தாம் செய்த பிழைகளுக்கு வெட்கமுற்று பக்திபூண்டு நடக்கலாயினர். பெருமான் நாகங்களைப் பூண்டதால் நாகநாதர் - பன்னகாபரணர் முதலிய பெயர்களைப் பெற்றார்,

"பைகிளரும் நாகம் அசைத்தான் கண்டாய் —
பற்றிப் பாம்பாட்டும் படிறன் கண்டாய்"

என்று திருநாவுக்கரசரும் கூறியுள்ளார்.

பெருமான் நாகம் பூண்டதில் சில தத்துவங்கள் உண்டு. இறைவன் பாம்புகளை ஆட்டுவதுபோல ஐந்து இந்திரியங்களாகிய பாம்புகளையும் ஆட்டுவிக்கின்றான். "பொறி அரவைந்தும் ஆட்டுவிக்கும் சித்தர் நீர்" என்று குமாரகுருபரர் கூறுகின்றார். பெருமான் அணிந்திருக்கும் பாம்பு குண்டலி சக்தியை விளக்குவதாக ஆகமங்கள் கூறும். மேலும் யோகப் பயிற்சியின் அடையாளமாகப் பாம்பையும் குறிப்பர். "In the world of symbols the serpent has come to convey many abstruse ideas. According to the Hatayoga the mysterious



சந்திரசேகரர்

power of Kundalini (குண்டலினி) is said to lie as a coiled serpent in the lowest layer of the human constitution".

பாம்பு ஆணவமலத்தின் அடையாளமாகவும், அது அறிவை அழிப்பதாகவும் கூறுவர். "பாம்பு மதியைத் தினலுறும்" என்று திருமூலர் கூறுகிறார்.

நாகந் தனையுரித்து நாகந்தனை வளைத்து
நாகந் தனைத்தரித்த நாதனே — நாகங்கொள்
பத்தானைக் கொன்றானைப் பாண்டி லெனவூர்ந்த
அத்தா அடியேற் கருள் — (தனிப்பாடல்)

(இதன் பொருள்) — யானையை உரித்து, மேரு மலையை வில்லாக வளைத்துப் பாம்பை ஆபரணமாக அணிந்த நாதனே, நாவையும், தலையையும் பத்தாகக் கொண்ட ராவணனைக்கொன்ற வனை வாகனமாகக்கொண்டு நடத்திய தலைவனே, அடியேனுக்கும் அருள் செய்வாயாக. (நா — நாக்கு, கம் — தலை) (நா + கம்)

---

10. துதிப்பாடல்கள். (பொது)

விநாயகர்

1 மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.
— (கந்தபுராணம்)

முருகன்

2 மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்கநின்ற
ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

— (கந்தபுராணம்)

நடராஜர்

3 குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

— (அப்பர்)

சிவபெருமான்

4 ஐயனே போற்றி போற்றி
அனகனே போற்றி எட்டுக்
கையனே போற்றி கால
காலனே போற்றி சோதி
மெய்யனே போற்றி போற்றி
விமலனே போற்றி பொய்யர்
பொய்யனே போற்றி போற்றி
புண்ணியப் பொருளே போற்றி.

பிக்ஷாடனர்

5 ஆறணி சடையாய் போற்றி
அடியவர்க் கெளியாய் போற்றி
ஏறணி கொடியாய் போற்றி
இருவினை தவிர்ப்பாய் போற்றி
வீறணி அமவா போற்றி
வேலவன் குரவா போற்றி
நீறணி அமலா போற்றி
நின்மலா போற்றி போற்றி—(செவ்வந்திப்புராணம்)

6 குலந்தரு நீதிமிக்க குணந்தரும் வேதஞ் சொல்லும்
பலந்தரும் உயர்ந்த சாயுச்சியந் தரும் பழுதிலாத
தலந்தரும் எல்லாம்வல்ல சயந்தரும் நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமை குன்று நயந்தரு நமச்சிவாய.
—(பழைய திருவிளையாடல் புராணம்)

தேவி

7 மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.
—(பதிபசுபாச விளக்கம்)

8 செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.
—(கந்தபுராணம்)

தக்ஷிணாமூர்த்தி

9 மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தி யாதரோ. —(கச்சியப்பர்)

நால்வர்

10 பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

அறுபத்துமூவர்

11 தத்து மூதெயில் மூன்றுந் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

சண்டேசுரர்

12 மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்.
—(சுந்தரர்)

கோளறு பதிகம்

13 வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. —(திருஞானசம்பந்தர்)

நாககன்னியர்

14 நாக நாட்டுறை இறையவன் புதல்வியர் நாங்கள்
ஏக மாகவே இத்தலத் தெழுவரு மெய்திச்
சோக நீங்கிடப் பாதலப் புதுமலர் தொடுத்துப்
பாக வான்மதி முடியவற் கணிகுவோம் பரவி
—(செவ்வந்திப் புராணம்)

நாகதீர்த்தமும், நாகநாதரும்

15 அத்தகு நாகதீர்த்தத் தாவிறை மகளிரைவர்
நித்தலு மடைந்திலிங்க பூசனை நெறியினுற்றி
உத்தம நாகநாதப் பெயரினங் கொளிரிலிங்க
வித்தகன் றனையும்போற்றி மீண்டுதம் மூர்க்குப்போவார்.
—(உறையூர்ப் புராணம்)

16 வையம் இன்புற மாதர்கற் போங்குக
செய்ய கோலை அரசன் செலுத்துக
பெய்க வானம் சிவாலயம் பீடுற
சைவ மென்னும் சமயம் தழைக்கவே.
—(செவ்வந்திப் புராணம்)

இறைவனிடம் திருநந்திதேவர் விண்ணப்பஞ்செய்தருளிய

பதினாறு பேறு

1 மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொறு மனமும் [1]
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுருச் சதுரும் [2]
பிறவி தீதெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும் [3]
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும் [4]

2 யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும் [5]
மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும் [6]
ஓது நல்லுப தேசமெய் யுறுதியும் [7] அன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும் [8]

3 மனமும் வாக்குநின் அன்பர்பால் ஒருப்படு செயலும் [9]
கனவி லும்உன தன்பருக் கடிமையாங் கருத்தும் [10]
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும் [11]
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும் [12]

4 தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடுந் திறனும் [13]
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும் [14]
ஏமு றும்பர தாரநச் சிடாதநன் னேன்பும் [15]
தூய்மை நெஞ்சின்யான் எனதெனுஞ் செருக்குருத் துறவும் [16]

5 துறக்கமீ துறையினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

ஸ்ரீ நாகநாத சுவாமியின் நற்பதம் போற்றி.

சனீஸ்வரர்

SRI NAGANATHASWAMI TEMPLE

TIRUCHIRAPPALLI

A SKETCH

The temple of Sri Naganathaswami which flanks the magestic Rock Fort Temple on the north western corner, facing the main street leading to the Cauvery, is a important Siva temple in the town of Tiruchirappalli. Presumably because the worshippers have to climb up two hundred feet to reach the Sri Thayumanavar shrine and they are not able to do it, there is always a regular and heavy concourse of devotees in this pagoda from all over the town.

It has a legendary origin, and the intensely the devout attach a sacred importance to this institution on the ground that the Saptha Nagakannikas prayed and offered worship to the Lord, who revealed himself to them in the name of Naganathar. It is also claimed that Saramamunivar sat and did thapas on the bank of the tank Siva Ganga within the temple premises and raised Sevvanthi flower bed with plants got from Nagaraja of Nagalokah for gathering the Sevvanthi flowers for offering worship. The deity (Moolavar) is said to be swayambu and this temple is dedicated to Sri Naganathar who is one of the five Nathars-the others being Boologanathar,

Kailasanathar, Velikanda Nathar and Kasiviswanathar. The name of the goddess is Anandhavalli — the Lady of Eternal Joy. The sthala Vriksham is the Bilva tree. The bronze and copper immages in the temple are of exquisite workmanship.

There are number of festivals conducted in the temple, spread over practically all the twelve months in the year. The most important of them being the Bramotsavam — coming in the month of Masi of the Tamil year. The Temple is richly endowed with valuable house properties besides lands enabling the Devasthanam to celebrate the main festivals with pomp and splendour. This temple is well worth a visit from every point of view.

—

Printed at Vasan Press, Allimal Street, Tiruchirapalli.

வள்ளுவர் அச்சகம், திருச்சி.